SWOAD

**SOCIAL WELFARE ORGANIZATION AMPARA DISTRICT**

**அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு.**

# ஆண்டறிக்கை - 2016





*T.P :- 067/2277276/ 0772242265*

*Fax :- 067/2278358*

*E.mail :- swoad@sltnet.lk*

## 01. அறிமுகம்.

1990ம் ஆண்டிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட யுத்தத்தினாலும், வன்செயல் களினாலும், அரசின் இனஒதுக் கலினாலும் பௌதீக ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் பாதிக்கப்பட்ட, பின்தங்கியிருந்த மக்களின் வாழ்வை மேம்படுத்தி அவர்கள் வாழ்விற்கு புத்தொளியூட்டப்பட வேண்டுமென்ற நோக்கில் **“எல்லோருக்கும் நல்வாழ்வு”** என்னும் தொனிப்பொருளை அடிநாதமாகக் கொண்டு இவ்வமைப்பு உதயமானது.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 58 கிராமக் கிளைகளில் மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 53 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு, 4826 அங்கத்தவர்களையும், 90 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.



## 02. தொலைநோக்கு / Vision

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும் சமமான வாய்ப்புக்களையும் வழங்கும் மீயுயர் நிறுவனம்.

**"Model of excellence, providing equal opportunity service for meeting basic needs of deprived people in Ampara district."**

## 03. பணிநோக்கு / Mission

விளைவுகள் அடிப்படையிலான வினைத்திறன் உள்ள சேவைகளை நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் முற்போக்கு எண்ணமுள்ள உதவுவோரையும், ஆக்கத்திறனும் மற்றவரை ஊக்குவிக்கும் திறனுள்ள பணியாளரையும் கொண்ட அமைப்பு.

**"People focused Organization enabling deprived Communities to enhance their quality of life through the provision of productive and results oriented services in partnership with progressive actors and a team of creative and inspiring activists "**

## 04. நோக்கம் :

1. நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், வறுமையை தணித்தலும்.
2. பாதிக்கப்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
3. ஜனநாயக சமூகத்தில் மக்களின் பங்குபற்றுதலை விருத்தி செய்வதும், அதனை மேம்படுத்தலும்.
4. அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கையினைப் பெறுவதற்கு வழிகாட்டல்.
5. உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவதற்கு வழிகாட்டல்.
6. வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்குதல்.
7. சமூக நல்லுறவு மற்றும் இனங்களிடையிலான சமாதான நல்லுறவை ஏற்படுத்தல்.

**05.இலக்குக் குழுக்கள் :**

1. பெண்கள்.
2. சிறுவர்கள்.
3. முதியோர்கள்.
4. இளைஞர்கள்.
5. பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள்.
6. வறிய மாணவர்கள்.
7. மிகவும் வறிய குடும்பங்கள்.
8. பாதிக்கப்பட்ட மக்கள்.
9. வெளிநாடு சென்ற குடும்பங்கள்.

**06. பணியாற்றும் பிரதேசங்களும், கிராமங்களும்.**

| இல | பிரதேசம் | கிராமங்களின் எகை |
|---|---|---|
| 1 | பொத்துவில் | 12 |
| 2 | திருக்கோவில் | 15 |
| 3 | கல்முனை | 13 |
| 4 | காரைதீவு | 12 |
| 5 | சம்மாந்துறை | 16 |
| 6 | நாவிதன்வெளி | 9 |
| 7 | ஆலையடிவேம்பு | 18 |
| 8 | அக்கரைப்பற்று | 14 |
| 9 | நிந்தவூர் | 12 |
| 10 | அட்டாளைச்சேனை | 15 |
| 11 | இறக்காமம் | 8 |
| 12 | உகண | 24 |

**07. பணியாளர்கள் விபரம்.**

| இல | பணியாளர் | ஆண் | பெண் | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட மட்டம் | 15 | 11 | 26 |
| 2 | பிரதேச மட்டம் | 05 | 06 | 11 |
| 3 | கிராம மட்டம் | 0 | 24 | 24 |
| 4 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 0 | 29 | 29 |
| | **மொத்தம்.** | **20** | **70** | **90** |

## 08. அங்கத்தவர்கள் விபரம்.

| இல | பிரதேசம் | அங்கத்தவர் எ-கை |
|---|---|---|
| 1 | பொத்துவில் | 663 |
| 2 | திருக்கோவில் | 1604 |
| 3 | காரைதீவு | 492 |
| 4 | கல்முனை | 698 |
| 5 | சம்மாந்துறை | 571 |
| 6 | நாவிதன்வெளி | 705 |
| | **மொத்தம்.** | **4733** |

## நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்.

### 01. வாழ்வாதார திட்டம்.

**வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கான கடன் உதவி வழங்கல்.**

- நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக, மக்களை சுயதொழிலில் ஊக்குவித்து அவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் தன்னிறைவான மக்கள் சமூகத்தினை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 3759 பயனாளிகளிக்கு 71,303,165.00 ரூபாய் நிதியானது சேமிப்புக் கடன் திட்டத்தின் கீழ் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளன.

- SDDP (Support for District Development Plan Project) திட்டத்தின் ஊடாக இத்திட்ட செயற்பாட்டு பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, இறக்காமம் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இலகுவில் பாதிக்கப்படக்கூடிய வருமைக்கோட்டின் கீழ் உள்ள 314 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் வாழ்வாதார தொழில் முன்னேற்றத்திற்கான வியாபாரத் திட்டமிடல் மற்றும் தேவை மதிப்பீடு தொடர்பாக 4 நாள் கொண்ட 12 பயிற்சிகள் வழங்கப்பட்டு தொழில்களை மேற்கொள்வதற்கு 20,000.00 ரூபாய் பெருமதியான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.






- இத்திட்ட கீழ் தெரிவு செய்யப்பட்ட 12 உள்ளூர் உற்பத்திக் குழுக்களுக்கு அவர்களின் தொழில்களை சட்ட ரீதியாக பதிவு செய்வதற்கான உதவிகள் மேற்கொண்டு வழங்கப்பட்டுள்ளன.

- SDDP (Support for District Development Plan Project) திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 225 கைவினை உற்பத்தியாளர்களுக்கான தொழில்நுட்ப ரீதியான (labeling, logo, design, printing) 5 நாள் கொண்ட 8 பயிற்சிகள் நடாத்தப்பட்டு 10,000.00 ரூபாய் பெருமதியான அவர்களுக்குத் தோவையான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.





- இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களுக்கு தொழில்வான்மை தொடர்பான தொழில்நுட்ப பயிற்சிகள் 2 நாள் கொண்ட 6 பயிற்சிகள் வழங்கப்பட்டு (Industrial Technology Institute (ITI) அவர்களின் தொழிலுக்குத் தேவையான 20,000.00 ரூபாய் பெருமதியான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.





- SDDP (Support for District Development Plan Project) திட்டத்தின் ஊடாக இளைஞர் தொழில் வான்மை அபிவிருத்தி செயற்பாட்டின் கீழ் பொத்துவில், திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, இறக்காமம் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 150 இளைஞர்களுக்கு வியாபாரத் திட்டமிடல் தொடர்பாக 5 நாள் கொண்ட 6 பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் தொழிலை மேற்கொள்வதற்கு 40,000.00 பெருமதியான உள்ளீட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.






- உள்ளூர் உற்பத்திப்பொருட்களை ஊக்கப்படுத்தும் முகமாக இவ் உற்பத்திப் பொருட்களை பெரியளவில் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் SDDP (Support for District Development Plan Project) திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு மாவட்ட மட்ட வர்த்தக கண்காட்சி ஒன்று மட்டக்களப்பில் நடாத்தப்பட்டது.







- தொழில்வான்மை ரீதியாக புதிய தெழில்நுட்பங்களை ஊக்குவிக்கும் முகமான SDDP (Support for District Development Plan Project) திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 150 உற்பத்தியாளர்களுக்கு 3 நாள் கொண்ட 6 வெளியிட கள விஜயங்கள் (Exposure visit ) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- SDDP (Support for District Development Plan Project) திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இருந்து 20 சமூகமட்ட அமைப்புக்களை இனங்கண்டு அவர்களுக்கு திட்ட விளக்கம் தொடர்பான ஆரம்ப கூட்டமானது 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது இதில் SWOAD அமைப்பு சார்பாக திரு.யோ.சுகேந்திரராஜ் (திட்டஉத்தியோகத்தர்) UNDP சார்பாக திரு மனோஜ் (கள நிலைப்பொறுப்பாளர்)மற்றும் திரு .S.ரகுராம மூர்த்தி (Regional Coordinator) அவர்களும் கலந்து கொண்ட துடன் திட்டம் தொடர்பான விளக்கத்தினை திரு மனோஜ் அவர்கள் வழங்கினார் DS,ADP,RDO,SSO,WDO,EDO போன்ற அரச அதிகாரிகள் கலந்து கொண்டதுடன் சமூகமட்ட அமைப்பக்களில் இருந்து 117 ஆண்களும் 132 பெண்களும் மொத்தமாக 249 பேர் கலந்து கொண்டனர்.




- பண்ணைத் திட்டச் செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் அவற்றில் செய்கை பண்ணப்படவேண்டிய பயிர்ச்செய்கைகள், கால்நடை வளர்ப்பு, தேவையான நில அளவுகள், நீர் வளங்கள் மற்றும் வர்த்தக வியாபாரத்திட்டங்கள் குறித்த கலந்துரையாடலானது 05.02.2016ம் திகதி Lanka Social Ventures உடன் சுவாட் தலைமையலுவலகத்தில் நடைபெற்றதோடு அவற்றுக்கான திட்டமிடல்களும் மேற்கொள்ளப்பட்டது.




## 02. தொழில் பயிற்சி வழங்கல்.

- மேற்படிப்பினை தொடரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டு வறுமை நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்குவதன் ஊடாக தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டல் வழங்குவதை நோக்காக் கொண்டு WUSC நிறுவனத்தின் அனுசரணையுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்பயிற்சிகள் அமைப்பினால் நடாத்தப்பட்டு இத்தொழில் பயிற்சியின் மூலம் 49 இளையோர்கள் பயன்பெறுகின்றனர்.

| இல | தொழில் பயிற்சி விபரம் | பிரதேசம் | பயிலுனர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 01 | Electrician . | Kalmunai | 15 |
| 02 | Room attendant | Pottuvil | 15 |
| 03 | Guest relation agent courses | Alayadivembu | 19 |
| மொத்தம். | | | 49 |





- இப்பயிற்சி மாணவர்களின் மொழியறிவினை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கிலம், சிங்களம், கணனி ஆகிய பாடங்களுக்கான வகுப்புக்களும் நடாத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில் வழிகாட்டல், மேலதிக பாதுகாப்பு, தலைமைத்துவம், பால்நிலை சமத்துவம், தொடர்பாடல், உரிமைகள், பொறுப்புக்கள், முதலுதவி, வாழ்க்கைத்திறன் தொடர்பான பயிற்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

- பயிற்சிநெறி மாணவர்களின் பெற்றோர்களுக்கான கூட்டமானது திட்ட உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக முகாமையாளர் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டதோடு இப்பயிற்சியில் பெற்றோரின் பங்களிப்பு மற்றும் பிள்ளைகளில் தொழில் திறன், நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மற்றும் மாணவர்களின் வருகை, பாதுகாப்ப போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

- சமூக அணிதிரட்டல் செயற்திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கான தொழில் வழிகாட்டல் (Youth carrier Guidant's) தொடர்பாக 3 கரத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் 270 பேர் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர்.

- புதிய தொழில் வாய்புத் தொடர்பாக சமூக அணிதிரட்டல் செயற்திட்டத்தின் கீழ் 4 வீதி நாடகங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதில் 500 இற்கும் மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளனர்.

- இளையோர் உணர்வூட்டல் (Youth motivation) தொடர்பாக 3 கருத்தரங்ககள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் 60 இளையோர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

- பின்தங்கிய கிராமங்களில் உள்ள குறிப்பாக இளைஞர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய பின்னர் வெளிநாடு செல்லத் தீர்மானிக்கின்ற போது அவர்கள் திறனற்ற ஊழியர்களாகவே வெளிநாடு செல்லத் தீர்மானிக்கின்றனர். இதனால் இவர்கள் குறைந்த சம்பளத்துடன், அனுபவமற்ற வேலைகளில் ஈடுபட்டு மூன்று அல்லது 6 மாதத்திற்குள் வேலை செய்ய முடியாதவர்களாக நாடு திரும்புகின்றனர். இதன்காரணமாக அக்குடும்பம் மீண்டும் அதிக கடன் சுமைக்கு முகங்கொடுகின்ற நிலை காணப்படுகின்றது. எனவே இந்நிலையை குறைக்கும் நோக்கில் சுவாட 'நிறுவனத்தினால் இத்திட்டத்தின் ஊடாக இளைஞர், யுவதிகளுக்கு பிரதேச செயலகம் மற்றும் தொழில்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து அவர்களுக்கு தொழில்வழிகாட்டல் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது.

- கிராம மட்டங்களில் அபிவிருத்திச் செயற்பாட்டை இளைஞர்களுக்கூடாக கட்டியெழுப்பும் நோக்கில் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான திருக்கோவில், பொத்துவில், கல்முனை, காரைதீவு, நாவிதன்வெளி, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 இளைஞர், யுவதிகளுக்கு தலைமைத்துவம், திறன் விருத்தி தொடர்பான பயிற்சியானது சுவாட் அமைப்பின் ஸ்தாபகர் திரு.ச.செந்துராசா அவர்களின் தலைமையில் 07.01.2016ம் திகதி நடாத்தப்பட்டது.




## 03.சிறுவர் அபிவிருத்தித் திட்டம்.

சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 15 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலைகளில் 29 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 464 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர்.

**பாலர் பாடசாலை பற்றிய விபரம்.**

| இல | பிரதேசம் | பாடசாலைகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | திருக்கோவில் | 7 | 239 | 17 |
| 2 | சம்மாந்துறை | 1 | 27 | 2 |
| 3 | நாவிதன்வெளி | 7 | 198 | 10 |
| | **மொத்தம்** | **15** | **464** | **29** |

**பாலர் பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகளாக கீழ் வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.**

- கதை கூறல்.
- படங்களை வெட்டி ஒட்டல்.
- சூழலிலுள்ள பொருட்களைக் கொண்டு செயற்பாடுகளை செய்து காட்டல்.
- அபிநயப் பாடல்கள்.
- சமய நிகழ்வுகளில் ஈடுபடுத்தல்.
- நிறம் தீட்டுதல்.
- கணித எண்ணக்கரு சம்பந்தமான குழுச் செயற்பாடுகள்
- மாதங்களைச் சொல்லுதல் (தமிழ். ஆங்கிலத்தில்)
- எழுத்துக்களை இனங்காணல்.
- பூக்கள் தெரிவு செய்தல்.
- களியால் உருவங்கள் அமைத்தல்.
- ஆக்கத்திறன் மூலம் தசை நார் பயிற்சியும் எழுதுவதற்கான முன்னாயத்தமும் ஏற்படுத்துதல்.
- சுவாச திறன் பயிற்சிகளை வழங்கல்.





• மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் நோக்கில் பிரதேச ரீதியாக பாலர் பாடசாலைகளை ஒன்றினைத்து விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி அவற்றுக்கான பரிசீல்களை வழங்கி ஊக்கிவிக்கப்படுகின்றது.

• மாணவர்களுக்கான விடுகைவிழா மற்றும், கலை நிகழ்ச்சிகளும், மாணவர்களின் கைப்பொருள் கண்காட்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.






**பெற்றோர் நிர்வாகத்திற்கான மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தல்:-**

- மாணவர்களின் கல்வி முன்னேற்றங்கள், குறைபாடுகள் குறித்தும், கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பாகவும் மாதாந்தம் பெற்றார் நிர்வாக்கூட்டம் அமைப்பினால் நடாத்தப்பட்டு கல்வி மேம்பாடு குறித்து பல தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இப் பெற்றார் நிர்வாகத்தினால் மாணவர்களுக்கான மதிய உணவு மற்றும் நிகழ்வுகளுக்கான பங்களிப்பு, சிரமதான நடவடிக்கைகள் போன்ற பொதுச்செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் நடாத்தல்.**

- ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இக்கலந்துரையாடலின்போது ஆசிரியர்களினால் எதிர் நோக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்தும், தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுவருவதுடன், திறன் மேம்பாடு குறித்த பயிற்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

- பிள்ளைகள் எதிர் நோக்குகின்ற உளவளரீதியான பிரச்சினைகளில் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்தி அவற்றை பாடசாலை மட்டத்தில் தீர்க்கக்கூடிய வாய்ப்பினையும், வழிவகைகளையும் ஏற்படுத்தும் முகமாக பாதுகாப்பான புலம்பெயர்வு செயற்திட்டத்தின் கீழ் உளவளரீதியாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 13.0.2016ம் திகதி உளவள வைத்தியர் dr.M.J.Nowfal அவர்களைக் கொண்டு பயிற்சி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.





## 07. சமூக அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள்

அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களுக்குட்பட்ட ஒரே கிராமத்தில் வசிக்கும் ஒத்த கருத்தினைக் கொண்ட 10-20 அங்கத்தவர்களை குழுக்களாக இணைந்து இக்குழக்களினூடாக சமூக அபிவிருத்தி செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

குழு அங்கத்தவர்களிடையே ஒற்றுமை மனப்பாங்கை உருவாக்கி அக்குழுவிலுள்ள அங்கத்தவரது குடும்ப முன்னேற்றத்திற்கும் கிராம, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் வகையில் இக்குழுக்களில் தலைவி, செயலாளர், பொருளாளர் உட்பட 7 பேரைக் கொண்ட நிர்வாகம் செயற்பட்டுக் கொண்டுவருகிறது. மாதம் ஒரு தடவை குழுக்கூட்டம் நடாத்தப்பட்டு அங்கத்தவரது பிரச்சினைகள் ஆராயப்பட்டு அப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகள் மீது கவனம் செலுத்தி அதற்கான விழிப்புணர்வுகளும், தீர்வுகள் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் மாதாந்தம் கிளைக்கூட்டம், பிரதேச நிர்வாகக்கூட்டம் நடாத்தப்பட்டு செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும், நடவடிக்கைகளும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- குழுக்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட குழுத்தலைவிகளுக்கான பயிற்சிகள் ஸ்தாபகர் திரு.செந்துாராசா அவர்களினால் நடாத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சியில் சுயசார்புக் குழுக்களின் நோக்கம், நிர்வாகத்தின் கடமைகள், பொறுப்புக்கள், சிறந்த குழுவினது பண்புகள், குழுக்கள் இணைந்து செயற்படக்கூடிய சமூக அபிவிருத்தி செயற்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது. இப்பயிற்சியில் 35 குழுத்தலைவிகள் பங்குபற்றினர்.



- சமூக சந்தைப்படுத்தல் (social marketing) தொடர்பாக அம்பாறை மாவட்ட பிரதேச 20 செயலாளர் பிரிவுக்குட்பட்ட 66 அரச உத்தியோகர்களை உள்ளிணைத்து கருத்தரங்கு ஒன்று சுவாட் தலைமையலுவலகத்தில் நடாத்தப்பட்டுள்ளது.

- உகந்தை கோவில் தீர்த்த உற்சவத்தின்போது 5000 துண்டுப் பிரசுரங்கள் அடித்து வழங்கப்பட்டு சமூக அணிதிரட்டல் தொடர்பாக பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது.

- சமூக மட்ட அமைப்புக்களின் செயற்பாட்டினை வினைத்திறனாக்கும் பொருட்டு SDC திட்டத்தின் கீழ் கிராம மட்ட குழுக்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியானது சுவாட் அமைப்பின் ஸ்தாபகரும், வளவாளருமான திரு.ச.செந்துராசா அவர்களின் தலைமையில் 06.02.2016ம் திகதி இறக்காமம் பிரதேசத்தில் நடைபெற்றது.




## 08. பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டம்.

தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம்பெயர்வதற்கான வழிகாட்டல் நிகழ்சித் திட்டத்தின் மாவட்ட மட்ட ஆரம்ப அறிமுகக் கூட்டமானது மாவட்ட செயலாளர் அவர்களின் தலைமையில் அம்பாறை கச்சேரியில் நடைபெற்றது. இதில் இத்திட்ட செயற்பாட்டு பிரதேசங்களான 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தம் 69 இற்கும் மேற்பட்ட துறைசார் அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.




சுவாட் நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம்பெயர்வதற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டதின் பிரதேசமட்டத்திலான ஆரம் திட்ட விளக்கக் கூட்டமானது இத்திட்ட செயற்பாட்டு பிரதேசங்களான ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, கல்முனை, காரைதீவு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை, இறக்காமம், உகண, பொத்துவில் ஆகிய 10 பிரதேசங்களிலும் பிரதேச செயலாளர் அவர்களின் தலைமையில் சுவாட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.க.பிறேமலதன் அவர்களினால் நடாத்தப்பட்டது.





புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் சமூக உளநலம் தொடர்பாக பாதிப்படைந்திருக்கின்ற குடும்பங்களை அடையாளம் கண்டு உளநல உதவிகள் மற்றும் வழிகாட்டல்களை மேற்கொள்ளும் முகமாக இத்துறையில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சிநெறியானது டாக்டர். ராஜாராம் அவர்களினால் சுவாட் நிறுவனத்தின் தம்பட்டைப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. இதில் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், உளவள உதவியாளர்கள், உளநல மருத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு) மற்றும் சுவாட நிறுவனத்தின் பணியாளர்கள் என சுமார் 38 பேர் கலந்து கொண்டனர்.





பொது மக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொடர்பான தகவல்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களில் இத்தகவல் நிலையத்தினை உருவாக்குவதற்கான உதவிகள் சுவாட் அமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ளன. தற்போது இவ் தகவல் நிலையங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் - (வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு), சிறந்த முறையில் நெறிப்படுத்தப்பட்டு புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சிறந்த சேவையினை வழங்கி வருகின்றனர்.





பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சட்ட நிவாரணத்தினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சுவாட் நிறுவனம் ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து சட்ட நடமாடும் சேவை நடாத்தப்பட்டது. இதில் சுமார் 150க்கு மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் கலந்து கொண்டு தங்களின் முறைப்பாடுகளை பதிவு செய்து கொண்டனர்.





பொதுமக்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் போலி முகவர்களினால் ஏமாற்றப்படுவதையும், அவர்கள் பிழையான முறையில் வெளிநாடு செல்வதைத் தடுத்து பாதுகாப்பான முறையில் புலம்பெயர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் அடையாளம் காணப்பட்ட பொது இடங்களில் பாதுகாப்பான புலம்பெயர் தொடர்பான தகவல்களை வீதியோர நாடகங்கள் ஊடாக வழங்கி பொதுமக்களையும், புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களையும ˙விழிப்புணர்வாக இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது





பாதிக்கப்பட்டுள்ள புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் வறுமை காரணமாக பாடசாலை உபகணரங்கள் இன்றி பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு சுவாட் நிறவனமானது இவ்வாறான மாணவர்களை அடையாளம் கண்டு அம்மாணவர்களை மீண்டும் பாடசலையில் இணைப்பதற்காக அவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களை வழங்குகின்றது. இதன்படி பாடசாலையை விட்டு இடைவிலகிய 83 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களமற்றும் மறுத்துவச் செலவுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.






பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சட்ட நிவாரணத்தினைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக சுவாட் நிறுவனத்தின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தகவல் நிலையத்தில் சுமார் 131 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு அம்முறைப்பாடுகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் கொன்சூலர் பிரிவில் அம்முறைப்பாடுகள் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதன்படி பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 105 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், 7 பேருக்கு 1,939,000.00 மரணம், விபத்து, சிகிச்சைக்கான இழப்பீட்டுத்தொகை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.








திட்டப்பிரதேசங்களில் மீளத்திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களின் நிலை தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள்,தேவைகள் தொடர்பாக கலந்துரையாடுவதுடன் இவர்களின் அனுபவங்களை புதிதாக வெளிநாடு செல்ல இருக்கின்ற குடும்பங்களுக்கு வழங்கும் முகமாகவும் இக்கலந்துரையாடல் கிராமங்களில் நடாத்தப்படுகின்றது. இதன் ஊடாக பிரச்சினைகளோடும், தேவைகளோடும் இருக்கின்ற புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.





திட்டக்கிராமங்களில் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கி அவர்களை வசதிப்படுத்தும் நோக்கில் 132 அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சட்ட உதவியாளர் தொடர்பான 5 நாட்கள் கொண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.





பொதுமக்களுக்கு பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பான விழிப்புணர்வை கிராம மட்டத்தில் ஏற்படுத்தும் நோக்கில் கிராமத்தில் உள்ள சுமார் 120 தொண்டர்கள ் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 4 நாட்கள் கொணட் பாதுகாப்பான புலம்பெயர் தகவல்கள் வழங்கும் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதில் தொண்டர்களாக சிவில் சங்கங்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள், யுவதிகள் கலந்துகொண்டனர்.





பொது மக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொடர்பான தகவல்களை வழங்கும் நோக்குடன் மக்களுடன் நேரடியாக இணைந்து பணியாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - (வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு), பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள, சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் போன்றோர்களுக்கு 21 தகவல்கள் வழங்கும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளது. இதில் சுமார் 697 மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.






திட்டக்கிராமங்களில் இலகுவில் பாதிப்படையக்கூடிய நிலையில் இருக்கின்ற குடும்பங்க்ளே (கணவரை இழந்தவர்கள், பிரிந்தவர்கள், குடும்ப பிரச்சினை, வறிய குடும்பங்கள், கடன் சுமையோடு இருக்கின்ற குடும்பங்கள், கல்வி அறிவு குறைந்த குடும்பங்கள்) அதிகமாக உபமுகவர்களினால் இலக்கு வைக்கப்பட்டு அவர்களின் கஸ்ட நிலையை சாதகமாக பயன்படுத்தி அவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான ஊக்குவிப்புப் பணத்தினை வழங்கி அவர்களை பாதுகாப்பற்ற வகையில் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். இவர்களின் அதிகமானவர்களே பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையினைக் கருத்திற் கொண்டு சுவாட் நிறுவனமானது இத்திட்டத்தின் ஊடாக திட்டக்கிராமங்களில் இத்தகைய குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு சரியான விழிப்புணர்வு மற்றும் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.





சுவாட் நிறுவனமானது பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரச்சினைகளோடும், தேவைகளோடும் இருக்கின்ற புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகள், வழிகாட்டல்களை மேற்கொள்ளும் முகமாக அண்மையில் மாவட்ட மட்டத்தில் உதவிகள் வழங்கக்கூடிய அரச திணைக்களங்கள் மற்றும் சர்வதேச, உள்ளூர் அரசசார்பற்ற அமைக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு புலம்பெயர் தொழிலாளர்களுக்கான வலையமைப்பு உருவாக்கப்பட்டு ஆரம்பக் அறிமுகக் கூட்டமும் நடாத்தப்பட்டது.





பாதுகாப்பற்ற முறையில் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் நோக்கில் சுவாட் நிறுவனத்தினால் இத்திட்டத்தின் ஊடாக பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. இதன்படி கடந்தவருடம் சுமார் பத்தாயிரததுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இத்தகவல்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டுள்ளன.





சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் தினத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வு சுவாட் அமைப்பினால் பிரதேச செயலகத்துடன் இணைந்து. ஒழுங்கு செய்யப்பட்டு இத்திட்டச் செயற்பாட்டு பிரதேசங்களான 10 பிரதெச செயலாளர் பிரிவுகளிலும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் DS,ADP,AO-GN,GS,DDO,CA,DOs,Mediation member, Paralegals, POIC, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.






பாதுகாப்பான புலம்பயர் தொழிலாளர் நிகழ்சித்திட்டங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு களப் பணிகளில் ஈடுபட்டுவரும் தொண்டர்களை பாராட்டி ஊக்கப்படுத்தும். நோக்கத்தின் அடிப்படையில் தொண்டர்களுக்கானமீளாய்வுக் கலந்துரையாடலும்இ பரிசில்இ நினைவுச்சின்னம் வழங்கி ஊக்கப்படுத்தும் நிகழ்வும் திட்ட முகாமையாளர் - திரு.K.பிறேமலதன் அவர்களின் தலைமையில் 24.12.2016ம் திகதி சுவாட் தலைமையலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுவாட் அமைப்பின் தலைவர் திரு V.பரமசிங்கம் அவர்கள் மற்றும் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர்.





SDC திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உதவியாளர்கள்இ சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள்இ பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்இசுவாட் நிறுவனத்தின் பாதுகாப்பான புலம்பெயர்வு திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்களுக்கு 'உள சமூக பிரச்சனைகளை அடையாளம் காணல் என்ற தலைப்பிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு இத் திட்டச் செயற்பாட்டு பிரதேசங்களில் 229 உளவள ரீதியான பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 100 குடும்பங்களுக்கு உளவள ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வுகாணும் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வழங்கப்பட்டுள்ளன.






பாதுகாப்பான தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தியுள்ள கிராமங்களில் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களில் அடையாளம் காணப்பட்ட உளநலம் சம்மந்தமான பிரச்சனைகளுக்கான தீர்வுகளை உரிய உத்தியோகத்தர்கள் ஒன்றுகூடி அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தின் அடிப்படையில் பிரதேச மட்ட உளநல ஆற்றுப்படுத்தல் மீளாய்வு கலந்துரையாடல்கள் மற்றும் சம்பவ மாநாடு நடாத்தப்பட்டு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.





## பிரதேச ரீதியான செயற்பாடுகள்.

### பொத்துவில் பிரதேசம்.

- பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 09 கிராமக் கிளைகளையும் 663 அங்கத்துவக் குடும்பங்களையும், 03 பணியாளர்களையும் கொண்டு பொத்துவில் பிரதேச காரியாலயம் தமது சேவையினை வழங்கிக்கொண்டு வருகின்றது.

- பொத்துவில் பிரதேச குழுச் செயற்பாடுகளாக பாலர் பாடசாலை, பொது இடங்களில் சிரமதான நடவடிக்கைகளும், குழுச் சீட்டின் ஊடாக வீட்டுப் பொருட்கள் வாங்கிக்கொடுத்தலும், பயிர் நாற்றுக்கள் விற்பனை செய்தல், அவல், மிளகாய்த்தூள் பைக்கற்பண்ணி விற்பனை செய்தல், காலை உணவு தாயாரித்து விற்பனை செய்தல், குழுக்களின் ஊடாக பயிர் விதைகள், பழ மரக் கன்றுகளை வழங்குதல், மரண வீடுகளுக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### திருக்கோவில் பிரதேசம்.

- திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் 15 கிராமக் கிளைகளையும், 1604 அங்கத்துவக் குடும்பங்களையும், 6 பணியாளர்களையும் கொண்டு தமது விரிவான சேவையினை வழங்கிக் கெண்டு வருகிறது.

- திருக்கோவில் பிரதேச குழுச் செயற்பாடுகளாக குரக்கன் மா, சோளன் மா, சிலப்பு அவல், தலையணையுறை, அலங்காரப் பொருட்கள், கிழங்குவகை, கருவாடு, மிக்ஷர், தேங்காய் எண்ணெய், மரக்கறிவகை, தேங்காய், முட்டை, கொச்சி, கத்தரி போன்ற பல உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு அவை மாதாந்தம் பிரதேசக்கூட்ட பெண்கள் சந்தையில் விற்பனை செய்து வருவாயினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

- திருக்கோவில் பிரதேசத்தில் 9 கிளை அங்கத்தவரிற்கான நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் போன்றன MOH அலுவலகத்தின் உதவியுடன் அங்கத்தவர்களுக்கு பரிசோதிக்கப்பட்டுள்ளது.

- விநாயகபுரம் -03 ம் கிளையினைச் சேர்ந்த குழுத்தலைவி நந்தினி அவர்களால் அவருடைய குழு உறுப்பினர் 7 பேரிற்கும் திருக்கோவில் பிரதேச அலுவலகத்திற்கும் 27 மிளகாய்க் கன்றுகள் வழங்கினார்.

- திருக்கோவில் பிரதேசத்தில் 3 கிளைகளிற்கு கிராமசேவையாளருடைய உதவியுடன் அடையாள அட்டை இல்லாதவர் 32 பேரிற்கு தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான ஆவணம் தயாரக்கப்பட்டு. அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

☞ 2 கிளை அங்கத்தவருடைய உதவியுடன் காளி கோயில் தீமிதிப்பின் போது தயிர் நீர் வழங்கப்பட்டுள்ளது.

☞ சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு 7 பாலர் பாடசாலை 14 கிளைகளில் பயனுள்ள மரங்கள் நடப்பட்டுள்ளது.

☞ கிருமிநாசினி பாவனை முறைபற்றிய விழிப்புணர்வுக் கலந்துரையாடல் 14 கிளைகளுக்குமான விவசாயிகளுக்கு லங்கெம் அமைப்பினரால் அலுவலகத்தில் நடாத்தப்பட்டது இதில் 65 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.

☞ பிரதேச சபையின் உதவியுடன் 14 கிளைகளுக்கான தேவைமதிப்பீடு பெறப்பட்ட பிரதேச சபைக்கு தேவை மதிப்பீட்டு கோரிக்கை வழங்கப்பட்டுள்ளது இதன் பிரகாரம் 2 கிளைகளுக்கான மின் விளக்குகள், மண்டானை உள்வீதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

☞ MOH அலுவலகத்தின் உதவியுடன் 14 கிளைகளுக்கும் கிணற்றில் இடுவதற்கான குளோரின் குழத்தலைவி மூலம் வழங்கப்பட்டுள்ளது.

☞ விநாயகபும் -03, திருக்கோவில் கிளையினால் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு குழத்தலைவியினால் வறுமையில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

☞ தம்பிலுவில்-02, விநாயகபுரம்-03 ஆகிய கிளையில் உள்ள இரு குழக்களினால் முதியோர் தினத்தினை முன்னிட்டு முதியோரிற்கான கௌரவிப்பு நடாத்தப்பட்டது.

☞ திருக்கோவில் -01,02 கிளைகளுக்கான கடனடிப்படையில் மின்சாரம், நீர் , வீட்டுவசதி போன்றவற்றினை பெற்றுக் கொள்ளும் கலந்துரையாடலானது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சுமித்திராவினால் நடாத்தப்பட்டது.

☞ திருக்கோவில்-01,02, விநாயகபுரம்-01,03 கிளைகளுக்கான தொழில் முயற்சிபற்றியும், வீட்டுத் தோட்டச்செய்கை பற்றிய கலந்துரையாடல் கிராம சேவகரினால் நடாத்தப்பட்டது.

☞ MOH இன் உதவியுடன் பிரதேசத்தில் காணப்படும் இளையோரையும் குழத்தலைவிமாரையும் ஒன்றிணைத்து 6 கிளைகளில் டெங்கு விழிப்புணர்வு நடாத்தப்பட்டது.

☞ விநாயகபுரம்-02 ம் கிளையின் சக்தி குழு உறுப்பினர்களால் சன்றைஸ் பாலர் பாடசாலைக்கு மாதாந்தம் ஒருதடவை இலைக்கஞ்சி வழங்கப்பட்டுள்ளது.

☞ விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு திருக்கோவில் பிரதேச அங்கத்தவரிற்கு 250 வாழை, 16 தோடங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

- 7 குழுக்களில் மாதாந்தம் குழுக்கள் முறையில் சேமிப்புச் செயற்பாடு இடம் பெறுகின்றது இதில் கிடைக்கும் பணத்தில் விசேட சேமிப்பு பணமாக அங்கத்துவத்தில் இடப்படுகின்றது.

- இரு குழுக்களினால் விசேடமான சேமிப்பினை சேமித்து குழவில் ஒருவருடத்தில் இப்பணத்தினை குழு உறுப்பினர்களுக்கு பிரித்து வழங்கப்படுகின்றன.

- 3 குழுக்களினால் அடிப்படை பொருட்களை ஒன்று சேர்த்து குழுக்கள் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றது.

- விநாயகபுரம் 02 கிளையின் சூரிய காந்தி குழு உறுப்பினரால் 167 குழுசைப்பை தயாரிக்கப்பட்டு விநாயகபுரம் கிளினிக் சென்றறிக்கு வழங்கப்பட்டுள்ளது.

- விநாயகபுரம்-01, திருக்கோவில் அஸ்ரோத்ரா, கண்ணண் குழு உறுப்பினரின் உதவியுடன் கணேசா முதியோர் இல்லத்திற்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுவருகின்றது.

- கிராமசேவகர், பொதுச் சுகாதார பரிசோதகர் தாதியசகோதரி, ஆசிரிய ஆலோசகர், சமூக சேவை உத்தியோகத்தர், பொலீஸ் உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், சமூர்த்தி முகாமையாளர், ஆகியோரினால் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தபபட்டது.

- சுனாமி ஞாபகார்த்ததினத்தை முன்னிட்டு திருக்கோவில் பிரதேச கிளை அங்கத்தவர்கள், பணியாளர்களால் சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தில் 2016.12.26 அன்று அன்னதான நிகழ்வு நடாத்தப்பட்டுள்ளது. இதில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

## காரைதீவுப் பிரதேசம்.

- காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 05 கிராமக் கிளைகளையும், 492 அங்கத்துவக் குடும்பங்களையும், 03 பணியாளர்களையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

- காரைதீவுப் பிரதேசத்தின் கிளைச் செயற்பாடுகளாக பக்கோடா, பாக்கு சீவல் பொதி, தேங்காயெண்ணை, கடதாசி பை, தலையணையுறை போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு விற்பனை செய்து வருமானத்தைப் பெற்று வருவதுடன், காரைதிவு பிரதேச சண்முகா மகா வித்தியாலயம் , விக்னேஸ்வரா வித்தியாலயம் , பாலையடிப் பிள்ளையார், காரையடிப் பிள்ளையார் , கிறிஸ்தவ தேவாலயம் போன்ற இடங்களில் சிரமதானமும் செய்யப்பட்டுள்ளது.

- நேரு குழு , கண்ணகி குழு அங்கத்தவர்களினால் மாதாந்தம் 1000 வில்லைப் பைக்கற்றுகள் வைத்தியசாலைக்கு ஒட்டிக் கொடுக்கின்றார்கள்.

- ☞ கிளைக் கூட்டத்தில் மாதாந்தம் பிரமுகர்களைக் கொண்டு கல்வியின் முக்கியத்துவம் , சுகாதாரம் போசாக்கு , சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றது.

- ☞ கிளை ரீதியாக டெங்கு ஒழிப்பு சிரமதானங்கள் செய்தல், பொலித்தீன் பாவனை குறைப்பு மேற்கொள்ளப்படுகின்றது

- ☞ அனைத்துக் கிளைகளிலும் குழு ரீதியாக மின்சாரம் , நீர் சிக்கனத்தை குறைக்கும் முகமாக மாதாந்தம் மின்சாரம் , தண்ணீர் பட்டியலை ஒப்பீடு செய்து அறிக்கை பேணப்படுகின்றது.

- ☞ ஆலயங்களில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனைகளுக்கு பிள்ளைகளை அனுப்பி சமய வழிபாடுகளில் ஈடுபட செய்கின்றார்கள்.

- ☞ இடைவிலகிய மாணவர்கள் ,பெற்றோர்களை பிரதேச தலைவி , கிளை நிர்வாகங்கள் சந்தித்து பின்னர் அதிபருடன் கதைத்து மீண்டும் பாடசாலையில் சேர்த்துள்ளர்.

- ☞ கிளை-05 அங்கத்தவர்களுக்கு பாரம்பரிய கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

- ☞ கிளை-04, கிளை -05 அங்கத்தவர்களுக்கு பாரம்பரிய உள்ளூர ் உணவு உற்பத்தியை ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

- ☞ கிளை-05 இல் புதிதாக அறநெறி பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**கல்முனைப் பிரதேசம்.**

- ☞ கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவில் 09 கிராமக் கிளைகளையும், 698 அங்கத்துவக் குடும்பங்களையும், 06 பணியாளர்களையும் உள்ளிணைத்து தமது சேவையினை வழங்கிக் கொண்டு வருகிறது.

- ☞ இப்பிரதேச குழுச் செயற்பாடுகளாக பொது இடங்கள், ஆலயங்களில் சிரமதானப்பணிகளும், மர நடுகைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிளகாய்த்தூள் விற்பனை செய்தல், மாடு வளர்ப்பினை மேற்கொண்டு பசுப்பால் விற்பனை செய்தல், தேங்காய் எண்ணெய் உருக்கி விற்பனை செய்கின்றனர். மற்பாண்டம் செய்து விற்பனை செய்தல், ஆடை வியாபாரம், தயிர் வியாபாரம் மேற்கொள்ளல், காளான்கள் வளர்த்து விற்பனை செய்தல், நெசவுத்தொழிலை மேற்கொண்டு வருவாயினை பெற்று வருகின்றனர்.

- ☞ புலமைப்பரிசில்ப்பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களுடைய பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.

- ☞ சக்தி, சரவணன், மல்லிகை, திருமகள், விநாயகர், சக்தி, செந்தூரம் குழுக்கள் இணைந்து மாதம் 100/= ரண் சேமிப்பு செய்யப்படுகின்றது.

- ☞ சுடர் ஒளி அங்கத்தவர்கள் 5 பேர் இணைந்து வீட்டுத்தோட்டம் செய்கின்றார்கள்.

- ☞ குழு அங்கத்தவர்கள் இணைந்து சீமெந்து பையில் பேக் செய்து கடைகளுக்கு கொடுக்கிறார்கள்.

- ☞ நற்பிட்டிமுனை-02 கிளையிலுள்ள குழுக்களிலுள்ள கல்வி கற்ற இளைஞர்கள் இணைந்து வறிய மாணவர்கள் 20 பேருக்கு இலவசமாக மாலை நேர வகுப்பு எடுக்கிறார்கள்.

- ☞ நற்பிட்டிமுனை சவக்காலை மதில்க்கட்டப்படாமையினால் சவக்காலையினுள் குப்பைகள் கொட்டப்பட்டு மிகவும் அசுத்தமாக காணப்படுவது நீண்ட காலமாக நற்பிட்டிமுனை மக்களால் ஒரு பிரச்சினையாக முன் வைக்கப்பட்டது.இப்பிரச்சினையை வேறு நிறுவனங்களிடமும் பிரதேச செயலகத்துடனும் இளைஞர் கழகங்களுடனும் பேசி எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக சென்ற மதம் இந்த சவக்காலையை சுற்றி மதில் கட்டுவதற்காக கல் வைக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இதில் எமது நற்பிட்டிமுனை கிளை நிர்வாகிகள், அங்கத்தவர்களின் பங்களிப்பும் காணப்படுகிறது.

- ☞ 15.11.2016 அன்று பெரியநீலாவணை சரஸ்வதி வித்தியாலய வீதி மோசமான நிலையில் இருந்தமையினை பிரச்சினையாக கருதி எமது அமைப்பு அங்கத்தவர்களும் அங்கத்தவர் அல்லாதவர்களும் இளைஞர் கழக உறுப்பினர்களும் ஏனைய சங்க உறுப்பினர்களும் எடுத்த நடவடிக்கையின் விளைவாக 15.11.2016 அன்று கொங்கிறீட் வீதி அமைக்கும் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

- ☞ 18.11.2016 அன்று உலக நீரிழிவு தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையிலிருந்து விழிப்புணர்வு யாத்திரை இடம் பெற்றது இதற்காக கல்முனைப்பிரதேச 15 அங்கத்தவர்களும் கலந்து கொண்டார்கள்.

- ☞ 10.11.2016 அன்று பாண்டிருப்பு லயன்ஸ் இளைஞர் கழகத்தினரால் சாதாரணதரப்பரீட்சைக்க தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான கணிதப்பாட இலவசக்கருத்தரங்கு பாண்டிருப்பு கலாச்சார மண்டபத்தினுள் நடைபெற்றது. 100 க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

- ☞ 12.11.2016 அன்று சேனைக்குடியிருப்பு சிவநெறி அறப்பணி இளைஞர் கழகத்தினரால் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

- ☞ 20.11.2016 அன்று சேனைக்குடியிருப்பு விநாயகர் அறநெறிப்பாடசாலையில் நாவலர் நினைவு தின விழாவினை கொண்டாடியதோடு சிறுவர்களுக்கான சொற்பொழிவுகளும் நடாத்தப்பட்டது. இதில் 40 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

- ☞ 14.11.2016 அன்று பெரியநீலாவணை நியு ஸ்டார் இளைஞர் கழகத்தினரால் டெங்கு ஒழிப்பு சிரமதானம் இடம்பெற்றது. நீலாவணை பிள்ளையார் கோயில் சுற்றுப்புற சூழலில் இச்சிரமதானம் இடம்பெற்றது. 25 இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்.

- ☞ 06.11.2016 அன்று நற்பிட்டிமுனை அறநெறிப்பாடசாலை மாணவர்களினால் கந்தசஸ்டி விரதத்திற்கான கலைநிகழ்வு நடாத்தப்பட்டிருந்தது.

- ☞ 10.11.2016 அன்று பாண்டிருப்பு கடற்கரை வீதியில் தெருமின்விளக்குகள் இல்லாமை கிளை அங்கத்தவர்களால் ஒரு பிரச்சினையாக முன்வைக்கப்பட்டு C.E.B இற்கு அறிவித்து 8 மின் கம்பங்களுக்கு மின்குமிழ்கள் போடப்பட்டது.

- ☞ 25.11.2016 அன்ற கல்முனை-01 கிளை அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவர்கள் அல்லாதவர்களுக்கும் பெண்கள் வெளிநாடு செல்வதனால் ஏற்படும் பிரச்சினைகள் தெடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.மனோராஜி அவர்களினால் விழிப்புணர்வுக்கூட்டம் நடாத்தப்பட்டது. இதில் 60 பேர் கலந்துகொண்டனர்.

- ☞ 06.11.2016 அன்று பாண்டிருப்பு பல்தேவைக்கட்டிடத்தில் அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவர் அல்லாதவர்களுக்கும் அனைறகைந ரஜனி அவர்கள் அழைக்கப்பட்டு தொற்றுநோய்கள் பற்றிய விழிப்புணர்வுக்கூட்டம் நடாத்தப்பட்டது.25 பெண்கள் கலந்து கொண்டார்கள்.

- ☞ 17.11.2016 அன்று சேனைக்குடியிருப்பில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிதா அவர்களைக்கொண்டு பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வுக்கூட்டம் நடாத்தப்பட்டது. 30 அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

- ☞ 27.11.2016 அன்று சேனைக்குடியிருப்பு அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு ஓய்வு பெற்ற அதிபர் சிசுபால ஐயா அவர்களைக்கொண்டு சைவப்பழக்கவழக்கங்கள் தொடர்பான கருத்தரங்கு நடாத்தப்பட்டது 50 மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## சம்மாந்துறை பிரதேசம்.

- ☞ சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 06 கிராமக் கிளைகளையும், 771 அங்கத்துவக் குடும்பங்களையும், 06 பணியாளர்களையும் உள்ளிணைத்து தமது சேவையினை வழங்கிக் கொண்டு வருகிறது.

- ☞ இப்பிரதேச கிளைச் செயற்பாடுகளாக பாலர் பாடசாலை மற்றும் ஆலய சிரமதான நடவடிக்கைகளும்,

- ☞ இளைஞர் யுவதிகளை கொண்டு சமூக அபிவிருத்தி செயட்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மல்வத்தை02 கிளையில் 10 இளைஞர்கள் இணைந்து 100M நீளமான வடிகானை துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

- ☞ சொறிக்கல்முனை கிளை 06 இளைஞர்கள் இணைந்து வறிய மாணவர் சுவாட் அமைப்புடன் தொடர்பு கொண்டு கொப்பிகள் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது.

- ☞ மல்வத்தை 02 கிளையில் 05ம் தரம் கற்கும் மாணவர்களுக்கு இலவச வகுப்பு நடாத்தப்படுகின்றது.

☞ சொறிக்கல்முனை கிளையில் 20 மாணவர்களுக்கு மறைக்கல்வி வகுப்பு இலவசமாக அங்கத்தவர் ஒருவரினால் வழங்கப்படுகின்றது.

☞ செயட்பாட்டில் பின்தங்கிய நிலையில் இருந்த வளத்தாபிட்டி பாலர் பாடசாலை தற்போது சிறப்பான முறையில் 40 பிள்ளைகளுடன் இயங்கி வருகின்றது.

**நாவிதன்வெளிப் பிரதேசம்.**

☞ நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் 09 கிராமக் கிளைகளையும், 705 அங்கத்துவக் குடும்பங்களையும், 16 பணியாளர்களையும் கொண்டு சேவையினை வழங்கி வருகிறது.

☞ இப்பிரதேச குழுச் செயற்பாடுகளாக குழுக்கள் ஒன்றிணைந்து வீட்டுத்தோட்டம் செய்தல், தேங்காயெண்ணை ஊற்றி விற்பனை செய்தல், குழுச் சீட்டுக்கள் மூலம் வீட்டுப் பாவனைக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொடுத்து தமது பொருளாதாரத்தில் மேம்பாடடைந்து வருகின்றனர்.

☞ 2016 இல் 60 புதிய அங்கத்தவாகள் சேர்க்கப்பட்டுள்ளனா.

☞ 540 மரக்கன்றுகள் நடப்பட்டள்ளன. விவசாய போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு பயிா விதைகள் மரக்கன்றுகள், பக்கட்டக்கள். விதைநெல், போன்றன பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

☞ மத்தியமுகாம் 04ல் உள்ள 48 அங்கத்தவர்களுக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்களினால் பிரதேச சபையினால் வழங்கப்படும் 32 சேவைகள் தெடர்பாக விரிவான விளக்கம் வழங்கப்பட்டது.

☞ மத்தியமுகாம் 05ல் உள்ள 34 அங்கத்தவர்களுக்கு மனித உரிமைகள் உத்தியோகஸ்தரால் சட்ட பிரச்சினைகளை தீர்க்கும் முறை பற்றியும் சிறுவா பாதுகாப்பு பற்றியும் விரிவான விளக்கம் வழங்கப்பட்டது.

☞ மத்தியமுகாம் 06 உள்ள 68 அங்கத்தவர்களுக்கு சிறுவா பாதுகாப்பு உத்தியோகஸ்தா ஜெனிற்றா அவர்களால் சிறுவா பாதுகாப்பு தொடர்பாகவும் சிறுவா துஸ்பிரயோகம் தொடர்பாகவும் விளிப்புனா்வு வழங்கப்பட்டது.

**அமைப்பின் உள்ளக ரீதியான செயற்பாடுகள்.**

- செயற்பாட்டு முன்னேற்றம் குறித்தும், செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகள், திட்டத்தின் பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்கில் அமைப்பினால் மாதாந்த மீளாய்வுக் கலந்துரையாடல்கள் தலைவர் திரு.வ.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

- ஒவ்வொரு திணைக்கள ரீதியாகவும் காணப்படும் பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் வாரத்தில் 3 நாட்கள் முகாமைத்துவசபை ஒன்றுகூடி பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றது.







- சுவாட் பிரதேச அலுவலகச் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் VDO,DAO,RC ற்கான மீளாய்வுக் கலந்துரையாடல் சுவாட் அமைப்பின் இணைப்பாளர் திரு ளு.செந்தூர்ராஜா சேர் அவர்களின் தலைமையில் 2016.03.01ம்திகதி சுவாட் அலுவலக தலைமைக் காரியாலயததில் இடம்பெற்றது.





- சுவாட் அமைப்பின் புத்தாண்டு நிகழ்வு தலைவர் திரு. V.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் 2017.01.02 அமைப்பின் தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆளுனர்சபை , முகாமைத்துவசபை உறுப்பினர்கள். மற்றும் அமைப்பின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

- இந்நிகழ்வில் ஓம்சாந்தி நிலையத்தின் பிரம்மகுமாரி அவர்கள் கலந்துகொண்டு நற்போதனைகளையும் ஆசியினையும் வழங்கினார். மற்றும் சுவாட் அமைப்பினால் 2017இல் முன்னெடுக்கப்பட இருக்கின்ற திட்டங்கள் தொடர்பாக பிரிவுசார் பொறுப்பாளர்களால் தெளிவுபடுத்தப்பட்டது.





- குழுத்தலைவிகளின் கடமைகள்.பொறுப்புக்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் நோக்கத்தின் அடிப்படையில் குழுத் தலைவிகளுடனான கலந்துரையாடல் சுவாட் அமைப்பின் தலைவர் திரு V.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் 2016.11.13ம் திகதி சுவாட் தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்றது இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 27 குழுக்களின் தலைவிகள் பங்குபற்றினர்.




- அம்பாறை மாவட்டத்தில் சுவாட் அமைப்பின் கண்காணிப்பின் கீழ் திருக்கோவில்இ நாவிதன்வெளி மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப்பாடசாலை பாலகர்கள் மற்றும் சிறுவர்இசிறுமிகள் அனைவருக்கும் சுவாட் அமைப்பின் தலைவர் திருவாளர்.V.பரமசிங்கம் அவர்களினால் சிறுவர்தின வாழ்த்துக்களை 01-10-2016ம் திகதி (காலை ஒன்றுகூடலின் போது) தெரிவித்தார். அத்தோடு அன்றைய தினம் இச்சின்னஞ்சிறார்களின் எதிர்காலம் சிறப்பிக்க இறைவனாசி வேண்டி அலுவலக உத்தியோகத்தர்களால் பிராத்தனைகள் மேற்கொள்ளப்பட்டது.

- மேலும் இச் சர்வதேச சிறுவர்தின நிகழ்வானது 03-10-2016ம் திகதி பாலர் பாடசாலைகளில் நடைபெற்றது. பாலர் பாடசாலை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களால் மலர் மாலை அணிவித்து அப்பாலகர்களுக்கு பெரியோர்களும்இ ஆசிரியரியர்களும் தங்களது ஆசிர்வாதத்தினை வழங்கினர். அத்தோடு நற்சிந்தனைகளும், மாணவர்களின் திறன்வெளிப்பாடுகளான பேச்சு, பாடல்கள், விளையாட்டுக்களும் நடைபெற்று, ஆசிரியர்களினால் மாணவர்களுக்கு பரிசுப்பொதிகளும் வழங்கப்பட்டன.




- இளைஞர் மேம்பாட்டிற்கு ஊடாக சமூக மேம்பாட்டினை ஏற்படுத்துவதை நோக்காக் கொண்டு அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான திருக்கோவில்இ பொத்துவில்இ காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் மேம்பாட்டிற்கென பணியாற்றுகின்ற அரச அதிகாரிகளை உள்ளிணைத்து இக் கலந்துரையாடலானது 19.09.2016ம் திகதி காலை 10.00 மணிக்கு சுவாட் தலைமைக் காரியாலயத்தில் அமைப்பின் ஸ்தாபகர் திரு.ச.செந்தூராசா அவர்களின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் YSO, District Sport coach, HRDA, WDO,SSO, HRD, SDO, ஆகியோர் உட்பட துறைசார் அரச உத்தியோகத்தர்கள் 20பேர் கலந்து கொண்டனர்.






- சுவாட் நிறுவனத்தின் வளர்ச்சி பற்றிய அனுபவப்பகிர்வினை மேற்கொள்ளும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட AMCOR அமைப்பிலிருந்து திட்டமுகாமையாளர் திரு.Y.S.ராஜன் அவர்களின் தலைமையில் ஏனைய உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று கடந்த 26.09.2016ம் திகதி சுவாட் அமைப்பிற்கு வருகை தந்தனர். சுவாட் அமைப்பின் தலைவர் திரு.V.பரமசிங்கம் அவர்களினால் சுவாட் அமைப்பானது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை எவ்வாறு படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளது என்பது பற்றியும், அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயற்பாடுகள், குழுச் செயற்பாடுகள் மற்றும் அமைப்பின் தெலைநோக்கம், குறிக்கோள், நிறுவனத்தின் கட்டமைப்பு, நிருவாக முகாமைத்துவம், மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பாவும் விளக்கமளிக்கப்பட்டது.





- சுவாட் அமைப்பின் குழு அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலானது 03.09.2016ம் திகதி சுவாட் அமைப்பின் ஸ்தாபகர் திரு.ச.செந்துராசா அவர்களின் தலைமையில் சுவாட் தலைமையலுவலகத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் சுவாட் அமைப்பின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்இ பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய இணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகவாக உத்தியோகத்தர்இ சேமிப்புக்கடன்திட்ட உத்தியோகத்தர்இ தகவல் உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





- பணியாளர்களின் வேலைகளை இலகுவாகவும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கும். பணியாளர்களின் செயற்திறனை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கிலும் அவர்களுக்குத் தேவையான தகவல் தொழில்நுட்பத் திறன் தொடர்பான பயிற்சியானது 27,28.02.2016ம் திகதிகளில் இருநாள் பயிற்சியாக சுவாட் தலைமைக் காரியாலயத்தில் விரிவுரையாளர் Mr.Hariharan Ganapathy (Special IT Trainer) அவர்களைக் கொண்டு நடாத்தப்பட்டுள்ளது.





- எமது அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சேவைகளை மென்மேலும் மேம்படுத்தி சிறந்த சேவையினை மக்களுக்கு வழங்கும் நோக்கில் பணியாளர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சியானது. 24இ25.02.2016ம் திகதிகளில் இருநாள் பயிற்சியாக சுவாட் தலைமைக் காரியாலயத்தில் கலாநிதி. திரு.க.குகதாசன் அவர்களைக் கொண்டு நடாத்தப்பட்டது.



